
# சேவா வாணி



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம்

தமிழ்நாடு - தெற்கு


ஜனவரி 2023

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

**என் அன்பு மாணவர்களே!**

**நீங்கள் அனைவரும் நலமா? நீங்கள் இன்னும் பழைய பழக்க வழக்கங்களையேக் கடைபிடிக்கிறீர்களா அல்லது ஏதாவது மாற்றம் இருக்கிறதா? ஏதேனும் உன்னதச் சிந்தனைகளோ, இலட்சியங்களோ கிடைக்கப் பெற்றீர்களா? தானியங்களைக் காற்றில் புடைக்கும் பொழுது, அவற்றின் மேல் உள்ள உமி நீக்கப்படுகிறது. அதேபோல் நீங்களும், உங்கள் நல்ல மற்றும் ஆரோக்கியமான எண்ணங்களில் இருந்து, தீய எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளாகிய விதைகளைப் பிரித்தெடுக்க வேண்டும். தீய எண்ணங்களாகிய விதைகளை உங்கள் அருகாமையில் எங்கும் முளைக்க விடாதீர்கள். இந்த சங்கராந்தி நாளிலிருந்தாவது சுவாமிக்கு நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் விதமாக வாழத் துவங்குங்கள். சாய் காண்பித்த மலர்ப் பாதையில் நடக்கத் துவங்குங்கள். சாயியின் அருளையும் அன்பையும் முழுமையாகப் பெறுங்கள். நல்லெண்ணங்கள், நன்னடத்தை மற்றும் நல்ல இலட்சியங்களுடன் உங்கள் வாழ்க்கையை நடத்துங்கள். உங்கள் கல்வியின் பலனை முழுமையாக அடைய முயற்சி செய்யுங்கள். சாயி உங்கள் "ஹ்ருதயஸ்த்தாய்". உங்கள் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றுபவர் சாய். இந்த சாய் தான் உங்கள் தாய். சாய் அன்னை!**



**அனைவருக்கும் என் ஆசிகள்**
**ஸ்வாமி**
**சங்கராந்தி, ஜனவரி 1972**

கோயம்புத்தூர்

# 1008 பஜனைகள் (01/01/2023)

**1008 பஜனைகள் - ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் - தமிழ்நாடு, கோவை மாவட்டம். டிசம்பர் 28 2022 முதல் ஜனவரி 1, 2023 வரை ஸ்ரீ சத்ய சாய் சஹஸ்ரநாமத்தின் அடிப்படையில் 1008 பஜனை "சாய் ஸஹஸ்ரநாம ஹாரம் - சாய் ப்ரேமாம்ருத சாரம்" நிகழ்ச்சியினை வழங்கியது. இந்த தனித்துவமான நிகழ்ச்சியின் சிறப்பு என்னவென்றால், பகவானின் சஹஸ்ர நாமத்தில் உள்ள ஒவ்வொரு நாமத்திலும் ஒரு பஜனை பாடப்பட்டது. பாடிய பஜனை மீண்டும் இடம் பெறாமல் ஆயிரத்து எட்டு பஜனைகளும் பாடப்பட்டன

கோவை, திருப்பூர், சேலம், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மாவட்டங்கள், கேரளா, மும்பை, அனந்தப்பூர் முன்னாள் மாணவர்கள் மற்றும் புட்டபர்த்தி ஆகிய பகுதிகளில் இருந்து பாடகர்கள் மற்றும் பக்தர்கள் இந்த 5 நாள் தெய்வீக நாமஸ்மரணத்தில் பங்கேற்றனர்.

தினமும் ஓம்காரம் , சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், வேதபாராயணம் மற்றும் பஜன் பாடல்கள் பாடப்பட்டது.
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் கோவைக்கு வருகை புரிந்த புகைப்பட கண்காட்சி இடம் பெற்றிருந்தது.
பாபாவின் அருள்மொழியை விளக்கும் வகையில்
படக்காட்சியை ( CHART ) பாலவிகாஸ் மாணவர்கள் மற்றும் மாணவியர் ஏற்பாடு செய்திருந்தனர். பொதுமக்கள் இக்காட்சியை கண்டு பிரமித்தனர். இந்த ஐந்து நாட்களிலும் தினந்தோறும் நாராயண சேவையும் நடைபெற்றது.

## கோயம்புத்தூர்

# 1008 பஜனைகள் (01/01/2023)

நிகழ்ச்சியின் இறுதி நாளன்று சுமார் **1500** க்கு மேல் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் வருகை புரிந்து பஜனையினை கேட்டு மகிழ்ந்தனர். ஜனவரி **1 2023,** நிகழ்ச்யின் நிறைவு நாள் அன்று பகவான் தனது புகைப்படத்தில் இருந்து அமிர்தத்தை (தெய்வீக அமிர்தத்தை) வெளிப்படுத்தி நிகழ்ச்சியை ஆசீர்வதித்தார்.











தர்மபுரி

# தத்து கிராமத்தில் கிராம சேவை

(29/01/2023)

தர்மபுரி சமிதி, முல்லிப்பட்டி கிராமம். கொடியேற்றத்துடன் துவங்கிய கிராம சேவையில், மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் 62 குழந்தைகளுக்கு பால விகாஸ் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. 2 மகளிர், பாலவிகாஸ் குருவாக வகுப்பு எடுக்க முன் வந்தனர். பாலவிகாஸ் மாணவ, மாணவியர், கிராமத்தைச் சுற்றி ஒரு சிறிய ஊர்வலம் நடத்தினர். அதனைத் தொடர்ந்து நாராயண சேவையும் நடைபெற்றது. பகவானின் அருள் வேண்டிப் பிரார்த்தனை மற்றும் மகா மங்கள ஆர்த்தியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

பயனாளிகள் விபரம்:
மருத்துவ முகாம்: 140 பேர் (கிராம மக்கள்)
நாராயண சேவை: 300பேர் (கிராம மக்கள்)







ஈரோடு

# மார்கழி மாதம் தினசரி நகர சங்கீர்த்தனம்

(13/01/2023)

கடும் குளிரையும் பொருட்படுத்தாமல், மார்கழி மாதம் முழுவதும், பாலவிகாஸ் குழந்தைகளும் மற்றும் பெரியவர்களும் ஆர்வத்துடன் நகர சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டனர். தினமும் தவறாமல் பங்கேற்றவர்களைப் பாராட்டி, காந்திநகர் சமிதி சார்பில், ஜனவரி 13 2023 அன்று மாலை, தத்து கிராமமாகிய சத்யா நகரில் , பரிசுகள் வழங்கப்பட்டன. சமிதி கன்வீனர், பாலவிகாஸ் குழந்தைகளுக்கும், கிராம மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்!







ஈரோடு

# நீர்மோர் விநியோகம் மற்றும் மருத்துவ சேவை

(16/01/2023)

பழனி முருகன் கோவிலுக்கு, பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு, நீர் மோர், டீ, சுக்கு காபி, கடலை மிட்டாய் மற்றும் பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டன. மேலும் ஜுர மருந்தும் **(paracetamol)**, வலி நிவாரணியும் வழங்கப்பட்டன. மூலப்பாளையம் சமிதி வாயிலாக நடைபெறும் இந்த சேவை, வருடம் ஒருமுறை தவறாமல் நடைபெற்று வருகிறது.









# ஈரோடு

# மாநில மற்றும் மாவட்ட அளவிலான பொறுப்பாளர்களுக்கான பயிற்சி முகாம்

(22/01/2023)

பிரசாந்தி கொடியேற்றத்துடன் துவங்கிய இந்நிகழ்ச்சியில் வேதபாராயணம் மற்றும் ஈரோடு மாவட்ட பஜனைக் குழுவின் பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு (தெற்கு) துணைத் தலைவர் திரு. விஜய் கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மண்டலத் தலைவர் திரு. முகுந்தன் அவர்கள் முக்கிய உரை ஆற்றினார்.

நம் பகவானின் நூறாவது பிறந்தநாள் விழாவை ஒட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு சேவைப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றி, சத்ய சாய் சேவை நிறுவனத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த மாநில அளவிலான பொறுப்பாளர்கள் அனைவரும் விரிவாகக் கலந்துரையாடினர். மாநிலத் தலைவர் திரு. சுரேஷ் அவர்களுடைய நன்றியுரை மற்றும் மகா மங்கள ஆர்த்தியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.










# இலவச கண் சிகிச்சை முகாம்

(29/01/2023)

காந்திநகர் சமிதியும், சித்தோடு சமிதியும் இணைந்து, கோவை சங்கர நேத்ராலயாவின் உதவியுடன், ஜனவரி 29 2023 அன்று, சித்தோடு, அரசினர் துவக்கப்பள்ளியில் இலவச கண் மருத்துவ முகாம் நடத்தினர். முகாமில் இலவச கண் பரிசோதனை மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன. கண் புரை அறுவை சிகிச்சைப் பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகள் கோயம்புத்தூருக்கு பேருந்து மூலம் அழைத்துச் செல்லப்பட்டு, அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. சேவாதளத் தொண்டர்கள் அந்த நோயாளிகளுடன் சென்று, அவர்கள் வீடு திரும்பும் வரை உடன் இருந்தனர். இந்த முகாம் பிரதி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று வருகிறது.







ஈரோடு

# இலவச டியூஷன் மற்றும் பாலவிகாஸ் வகுப்பு

திங்கள் முதல் சனி வரை தினமும் மாலை நேரத்தில், ஈரோடு மெயின் சமிதி வளாகத்தில், இரண்டு மூத்த குருமார்களின் உதவியுடன் பாலவிகாஸ் வகுப்பு மற்றும் இலவச டியூஷன் வகுப்பு நடத்தப்படுகிறது. இதில் 40 குழந்தைகள் பங்கேற்கின்றனர். மேலும், வாரம் இரு முறை இரவு உணவு நாராயண சேவையாக அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.





காஞ்சிபுரம் வடக்கு

# மானவ சேவையே மாதவ சேவை; நர சேவையே நாராயண சேவை

(08/01/2023)

நம் அன்பு பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் நல்லாசிகளுடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் சமிதிகள் அனைத்தும், ஜனவரி 8 2023, ஞாயிற்றுக்கிழமை அன்று தங்கள் குடும்பத்துடன் நாராயண சேவையில் (குடும்ப நாராயண சேவா) கலந்து கொண்டனர். அனைவரும் தங்கள் வீடுகளில் குடும்பத்துடன் சேர்ந்து அன்புடன் சமைத்த உணவினை பொட்டலங்களாகக் கட்டினர். அந்தந்த சமிதியின் சேவாதளத் தொண்டர்கள் அவர்களின் வீட்டிற்குச் சென்று, பொட்டலங்களை சேகரித்து அவற்றை சமிதியில் சேர்த்தனர். அந்த உணவுப் பொட்டலங்கள், பகவானுக்கு பிரம்மார்ப்பணம் கூறி அர்ப்பணித்த பின்னர், பகவானால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாராயணர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டன. மொத்தம் 442 உணவு பொட்டலங்கள் 36 சேவாதள தொண்டர்களால் நாராயணர்களுக்கு அன்புடன் அளிக்கப்பட்டன.
ஜெய் சாய்ராம்.





காஞ்சிபுரம் தெற்கு

# வல்லக்கோட்டை முருகன் கோயில் - நாராயண சேவைப் பணி (01/01/2023)

புதுவருட நாளாகிய ஜனவரி 1 2023, வல்லக்கோட்டை கே கே வி கே டிரஸ்ட் உடன் இணைந்து நமது நிறுவன சேவாதளத் தொண்டர்கள், கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் செய்யும் சேவையில் ஈடுபட்டனர். காய்கறி நறுக்குதல் பாத்திரம் கழுவுதல் உணவு பரிமாறுதல் மேலும் சமைத்த உணவை அன்னதான கூடத்திற்கு எடுத்து வருதல் போன்ற சேவைப் பணிகளை மேற்கொண்டனர். பகவானின் அருளால், இந்த சேவை பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது.





# மூத்த பாலவிகாஸ் குருவிற்கு மரியாதை

(08/01/2023)

மாவட்டத்தின் மூத்த பாலவிகாஸ் குருவான ஸ்ரீமதி வள்ளி ரோஜா அவர்களுக்கு பெருங்களத்தூர் சமிதி வளாகத்தில், நிறுவனத்தின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட முன்னாள் கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஜோதி ஜெயராமன் அவர்களும் தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் டாக்டர் கே பி ஸ்ரீதர் அவர்களும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தலைவர் மற்றும் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளரும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்டத்தின் அனைத்து துறைப் பொறுப்பாளர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு

# பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு – சாய் பிரேம பந்தம் (08/01/2023)

வேத கோஷத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. “வேத ஆகாஷ வாணி” மூலம் வேதம் கற்ற ஆண்களும் பெண்களும் பல சூக்தங்கள் ஓதினர். தொடர்ந்து, பாலவிகாஸ் முன்னாள் மாணவியர் நால்வர் சாயுடன் பிரேம பந்தம் என்ற தலைப்பில் சுவாரஸ்யமான உவமைகளும், உண்மைச் சம்பவங்களும் கூறி அழகாக விளக்கினர். “எப்பொழுதும் ஸ்வாமியுடன் தொடர்பில் இருப்பது எப்படி?” என்ற கருத்தை முன்வைத்துப் பேசிய இந்த உரையாடல், அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் விதமாக இருந்தது. சாய் என்றால் எளிய வாழ்க்கை என்றும் விளக்கினர். தாம்பரம் சமிதி கல்வி ஒருங்கிணைப்பாளர் முன்னாள் மாணவர்களை வரவேற்றுப் பேசினார். மாவட்டத் தலைவர் மற்றும் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் நிகழ்ச்சியில் பங்கேற்று, இளைஞர்களே நிறுவனத்தின் எதிர்காலத் தூண்கள் என்று ஊக்குவித்து உரையாற்றினர். ‘ஸ்வாமியே அனைவருக்கும் முதல்' என்று வலியுறுத்தும் காணொளிக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. அது, இளைஞர்களை மிகவும் ஊக்குவிக்கும் விதமாக இருந்தது. டாக்டர் விசாலாட்சி நாகராஜு அவர்களின் ஊக்குவிக்கும் உரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



## காஞ்சிபுரம் தெற்கு

# காசநோய் மருத்துவமனையில் சேவை

(11/01/2023)

கலெக்ட்ரெட் சமிதியின் சார்பில், அரசு மருத்துவ மனையில், 40 காச நோயாளிகளுக்கு, பொங்கல் தினத்தன்று சாய் புரதம் வழங்கும் சேவைப்பணி நடைபெற்றது. போர்வைகளும் வழங்கப்பட்டன.










காஞ்சிபுரம் தெற்கு

# SSSVIP கிராமத்தில் பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டம்

(14/01/2023)

ஆரம்பாக்கம் கிராமத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. ஜனவரி **14 2023** அன்று காலை **5.15** மணிக்கு ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்துடன், ஒரு பக்தரின் இல்லத்தில் விழா துவங்கியது. தொடர்ந்து **9** இல்லங்களில் பஜனைகள் நடைபெற்றது. கிராம பாலவிகாஸ் குழந்தைகளுக்கு கோலப்போட்டி நடத்தி, தாம்பரம் சமிதி கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி சந்தான லட்சுமி அவர்களால் பரிசுகளும் வழங்கப்பட்டன.
**16-1-23,** மாட்டுப் பொங்கல் அன்று, கிராமத்தில் உள்ள மாடுகளுக்கு வஸ்திரம், கரும்பு, மஞ்சள் மற்றும் தாம்பூலத்துடன் கோ பூஜை விமர்சையாக செய்யப்பட்டது. கிராம மகளிருக்கு மஞ்சள் குங்குமத்துடன் தாம்பூலம் அளிக்கப்பட்டது. ஆரம்பாக்கம் சாய் கார்டன்ஸில் பகவானுக்கு மகா மங்கள ஆர்த்தியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது







காஞ்சிபுரம் தெற்கு

# செரப்பணஞ்சேரி கிராமத்தில் பொங்கல் விழா

(14/01/2023)

பொங்கல் நாளை ஒட்டி **24** இருளர் குடும்பங்களுக்கு

- பொன்னி பச்சை அரிசி **1** கிலோ
- வெல்லம் **1** கிலோ
- சிறு பருப்பு **250** கிராம்
- சாய் புரதம் **1** கிலோ
- ஏலக்காய்
- முந்திரி
- உலர் திராட்சை
- நெய்

ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டன. சாய் பஜனையுடன் துவங்கிய நிகழ்ச்சி, சாய் காயத்ரியுடன் நிறைவு பெற்றது.






# காஞ்சிபுரம் தெற்கு

## புதிய பாலவிகாஸ் மையம் (15/01/2023)

பகவானின் கருணையால், காட்டான் குளத்தூரில் உள்ள சிவானந்த குருகுலம் சேவாஷ்ரமத்தில் புதிய பாலவிகாஸ் மையம் துவங்கப்பட்டது.



## மகளிர் தின கொண்டாட்டம் 19/01/2023)

தாம்பரம் சமிதி மகளிர் குழு குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு 50 பாக்கெட் சாய்புரதம் விநியோகம் செய்தனர். சாய் புரதம் அனந்தபூர் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது. மேலும், மருத்துவமனை ஊழியர்களுக்கு 100 செட்டு என் 95 மாஸ்க், கையுறைகள், தலைக்குத் தொப்பிகள் ஆகியவை வழங்கப்பட்டன. அதே நாளில், மண்ணிவாக்கம் சமிதியைச் சேர்ந்த மகளிர் குழு மண்ணிவாக்கத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லத்திற்கு சென்று பஜனை செய்து அவர்களை மகிழ்வித்தனர்.



காஞ்சிபுரம் தெற்கு

# சாய் பெற்றோர்மை (22/01/2023)

மாத்ரு பூஜை விழா அனைத்து பெற்றோர்களுக்கும், தாத்தா பாட்டிகளுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது, அவர்கள் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். திரு கணேஷின் அற்புதமான பேச்சை (உரையாடல்) கேட்டு பெற்றோர்கள் மிகவும் திருப்தியடைந்து ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்கிறார்கள். குழந்தைகள் உரிமையாளரைப் போல அல்லாமல் பராமரிப்பாளராகவும், தங்கள் குழந்தைகளை சரியான பாதையில் வழிநடத்தவும் இந்த நிகழ்ச்சி கற்றுத்தந்தது.








காஞ்சிபுரம் தெற்கு

# போர்வைகள் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி (22/01/2023)

வெங்கடாபுரம் ஞானோதயா பள்ளியில் விடுதியில் தங்கிப் படிக்கும் சுமார் 30 குழந்தைகளுக்கு போர்வைகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் இனிதே நடைபெற்றது.

மாணவிகளுக்கு, நமது ஸமிதி பாலவிகாஸ் குழந்தை களின் பெற்றோரான திருமதி கவிதா ஸாய்ராம் போர்வைகள் வழங்கினார். மேலும், பிஸ்கட்டுகளும், இனிப்பும் வழங்கப்பட்டது.



காஞ்சிபுரம் தெற்கு

# ஏகாதச ருத்ர பாராயணம்

(23/01/2023)

பகவானின் கருணை மற்றும் ஆசிர்வாதத்தால் சின்ன காஞ்சிபுரம் சமிதியின் மூலம் ஜனவரி **23** முதல் பிப்ரவரி **2 2023** வரை காஞ்சிபுரம் வாணி தெருவில் அமைந்துள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தில் **11** நாட்கள் ஏகாதச ருத்ர பாராயணம் நடைபெற்றது.

காலை **05:00** முதல் **05:30** வரை கணபதி பூஜை மற்றும் சங்கல்பம் . அதனைத் தொடர்ந்து **05:30** முதல் **08:00** மணி வரை ஏகதாச ருத்ர பாராயணம் நடைபெற்றது.

**10** நாட்களும், மாலை நேரங்களில் சாய் பஜன் மற்றும் ஆன்மீக சொற்பொழிவு நடைபெற்றது.

இதில் காலையும், மாலையும் ஓதுவார்கள் மூலம் ஷோடச உபசாரம் நடைபெற்றது.

**11**ம் நாள் மாலை சாய் பஜன் மற்றும் சமிதியை சேர்ந்த இரு பாலவிகாஸ் குரு(மகிலா) மூலம் கர்நாடக சங்கீத நிகழ்ச்சி நடைபெற்றது.






காஞ்சிபுரம் தெற்கு

# மஹா காயத்ரி பிரதிஷ்டை (28/01/2023)

ஜனவரி **28** மற்றும் **29 2023** தேதிகளில் பார்வதி நகர் சமிதியில் ஸ்ரீ மஹா காயத்ரி மற்றும் ஸ்ரீ மகாசாயீஸ்வர லிங்கம் பிரதிஷ்டை வைபவம் விமர்சையாக நடந்தது. மங்கள வாத்தியத்துடன் துவங்கிய முதல் நாள் பூஜையில், கணபதி பூஜை, மஹா சங்கல்பம், வாஸ்து ஹோமம், கலச ஸ்தாபனம், காயத்ரி ஹோமம் வஸ்த்ராஹுதி மற்றும் பூர்ணாஹுதி ஆகியவை இடம் பெற்றன.

ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் மற்றும் பிரசாந்தி கொடியேற்றத்துடன் துவங்கிய இரண்டாம் நாள் பூஜையில், கோ பூஜை, கணபதி பூஜை, மஹா சங்கல்பம், கணபதி ஹோமம், காயத்ரி ஹோமம் மற்றும் மஹா காயத்ரி பிரதிஷ்டை வைபவம், மஹா கலசாபிஷேகம் ஆகிய பூஜைகள் நடந்தேறியன.

பின்னர், பஜனை, அர்ச்சனை, மாங்கல்ய தாரணம் மற்றும் மஹா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவேறியது.

இந்நிகழ்ச்சியில் சுமார் **300**க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநிலத் தலைவர் (மெட்ரோ), மாநில துணைத்தலைவர் மற்றும் மாவட்டத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு

# மஹா காயத்ரி சிலை பிரதிஷ்டை

நேரில் காண முடியாத பக்தர்களுக்கு இணையதளம் வழியாக வீட்டில் இருந்தபடியே கண்டுக்களிக்க முழு நிகழ்ச்சியும் பிராட்காஸ்ட் செய்யப்பட்டது.

Day 1: https://www.youtube.com/watch?v=CbHctbczNI8
Day 2: https://www.youtube.com/watch?v=SeBG41Q1T_Q



## காஞ்சிபுரம் தெற்கு


# பேரிடர் மேலாண்மை (28/01/2023)

ஜனவரி **28 2023** அன்று, காஞ்சிபுரம் சங்கரா கல்லூரியில், பேரிடர் மேலாண்மை பற்றிய ஒரு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. மாணவர்களுடன் சேர்ந்து கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்களும் முழு நிகழ்ச்சியிலும் பங்கு பெற்றனர். பகவானின் அருளால் அவர்கள் அனைவரும் இந்த முகாமின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து பாராட்டினர்.









காஞ்சிபுரம் தெற்கு

# பாலவிகாஸ் குழந்தைகளை வழிநடத்தும் பணிமனை

(29/01/2023)

எங்கள் அன்பிற்குரிய சுவாமியின் ஆசியுடன், சமிதி வட்டாரத்தில் உள்ள பெற்றோர்கள் மற்றும் உறுப்பினர்களுக்காக ஸ்ரீ சத்ய சாய் பெற்றோர் பயிற்சி பட்டறையை பார்வதி நகர் சமிதி நடத்தியது நமது அன்புக்குரிய பகவானின் மகத்தான ஆசீர்வாதத்துடன். ஸ்ரீ. பேச்சாளர் கணேஷ் ஜி பேசினார் குழந்தை வளர்ப்பு முறை மற்றும் அவர்களை வழி நடத்தும் முறைகளைப்பற்றி பேசினார்.



காஞ்சிபுரம் தெற்கு

# கண் சிகிச்சை முகாம்

(29/01/2023)

செங்கல்பட்டில் மாதம் தோறும் தவறாமல் கண் சிகிச்சை முகாம் நடைபெற்று வருகிறது இந்த மாத முகாமில் 14 ஆண்களும், 13 மகளிரும் பரிசோதனைக்கு வந்தனர். அவர்களில், 7 ஆண்களும், 13 மகளிரும் மருத்துவரின் ஆலோசனைப்படி, மேற்படி சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



## காஞ்சிபுரம் தெற்கு

# தையல் பயிற்சி நிறைவு விழா

(29/01/2023)

ஜனவரி **29 2023** அன்று, பூண்டிபஜார் சமிதியில் தையல் பயிற்சி மற்றும் எம்ப்ராய்டரி பயிற்சி முடித்த மகளிருக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. பங்கு பெற்ற மகளிருக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் விளையாட்டுகள் நடத்தி, பரிசுகளும் வழங்கப்படன. திரு **B. K** மோகன், **SSSVIP Coordinator,** மற்றும் திரு ரவி மோகன்ராவ், **PS Coordinator** சிறப்பு உரை ஆற்றினர் .

பங்கு பெற்றோர் விவரம்:
மகளிர் – **30.** குழந்தைகள் – **35.** சமிதி உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் – **35**
மொத்தம் – **100** பேர் .



காஞ்சிபுரம் தெற்கு

# பாலவிகாஸ் குழந்தைகளை வழிநடத்தும் பணிமனை

(29/01/2023)

இந்நிகழ்ச்சி கூடுவாஞ்சேரியில் லக்ஷ்மி ஹால் **NPR** வளாகத்தில் மாலை **03.00** மணி முதல் **07.00** மணி வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது கூடுவாஞ்சேரி , மறைமலைநகர், மற்றும் மாடம்பாக்கம் ஸமிதிகள் சார்பாக கூட்டாக இணைந்து நடத்தும் மாபெரும் நிகழ்ச்சியாக மிகச் சிறப்பாக நடந்தேறியது நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திரு ராஜன் ஸாய்ராம், ,மாநில பிரசாந்தி சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (தெற்கு), மற்றும் திரு ராஜேந்திரன் ஸாய்ராம் – மாநில சேவை ஒருங்கிணைப்பாளர், திரு நாராயணன் ஸாய்ராம் – திருவண்ணாமலை மாவட்டத்தலைவர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பல தலைப்புகளில் கண் காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் தலைப்புகளில் பார்வையாளர்களுக்கு மூன்று ஸமிதியின் பாலவிகாஸ் குழந்தைகள் மிக அழகாக விளக்கமளித்தார்கள்

மேலும் நடனம் வில்லுப்பாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூன்று ஸமிதியின் பாலவிகாஸ்
மாணவ மாணவிகள் மிக நேர்த்தியாக வடிவமைத்து வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் தெற்கு

# பாலவிகாஸ் குழந்தைகளை வழிநடத்தும் பணிமனை

மேற்கண்ட நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சியில் குருமார்களின் உழைப்பும் மாணவ மாணவிகளின் ஆர்வமும் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது அதைத் தொடர்ந்து நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தலைவர் திரு நாராயணன் ஸாய்ராம் அவர்கள் வழங்கிய ஊக்கமளிக்கும் சிறப்புரை மிக நேர்த்தியாக அமைந்தது

மங்கள ஆரத்திக்குப்பிறகு பிரஸாதம் விநியோகம் செய்யப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது.






மதுரை

# இளைஞர் பிரிவினரின் தூய்மை சேவை & நாராயண சேவை

(01/01/2023)

மதுரை மாவட்டம், புதுபட்டி கிராமத்தின் அருகில் அமைந்துள்ள தொழுநோயாளிகள் மறுவாழ்வு மையத்தில் தூய்மை சேவை மற்றும் நாராயண சேவை இன்று ஜனவரி 01 2023 காலை சிறப்பாக நடைபெற்றது. இளைஞர் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மாநில இளைஞர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் திரு. பிரசன்னா அவர்கள் கலந்து கொண்டார். மறுவாழ்வு மையத்தின் கழிப்பறைகள், அவர்கள் உபயோகிக்கும் குடிநீர் தொட்டி ஆகியவை தூய்மை செய்யப்பட்டதுடன் அவர்களின் குடியிருப்பு அறைகளும் ஒற்றடை நீக்கி சுத்தம் செய்யப்பட்டது. தூய்மை பணி நிறைவில் சாயி பஜன் நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் நாராயண சேவை செய்யப்பட்டது. குடியிருப்போர் அனைவரின் இல்ல வாயிலுக்கு சென்று பகவானின் புத்தாண்டு அருட் பிரசாதமாக பகவானின் 2023 மாத நாட்காட்டி, ஸாயி புரோட்டீன், ஸ்வாமி விபூதி, குளியல் சோப் மற்றும் துணி துவைக்கும் சோப் ஆகியவை கொண்ட 'தாம்பூல பை' வழங்கப்பட்டது. இதில் மூத்த சாயி பக்தர்கள் 5 பேர்களுடன் 8 யுவர்களும், 7 யுவதிகளும் கலந்து கொண்டனர்.





மதுரை

# முப்பெரும் விழா (01/01/2023)

பகவானின் பெருங்கருணையால் குட்லாடம்பட்டி ஆரோக்கிய நிலையத்தில் முப்பெரும் விழா ஜனவரி **01 2023** இனிதே நடைபெற்றது.
நிகழ்ச்சி காலை **10.30** மணி முதல் மதியம் **1.00** மணி வரை நடைபெற்றது.

- **தையல் சான்றிதழ் வழங்கல்:** சாயி பஜனுடன் துவங்கிய நிகழ்ச்சியில் முதல் நிகழ்ச்சியாக,முதல் பேட்ச் தையல் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

- **பசுமை திட்டம்:** பகவானின் **100**வது அவதார வைபவ திட்டமான 'பசுமை திட்டத்திற்கு' உதவும் வகையில், செடிகளை வளர்த்து சமிதிகளுக்கு கட்டணமின்றி வழங்க 'செடி வளர்க்கும்' திட்டம் துவக்கப்பட்டது.

- **வளைகாப்பு:**அங்கப்பன் கொட்டம், குட்லாடம்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட **11** கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு கர்ப்பிணி பெண்ணுக்கும் மாலையிட்டு, சந்தன குங்குமமிட்டு, பூசூட்டி, வளையல் போட்டு, சேலை வழங்கி, திருஷ்டி சுற்றி, நலுங்கு பாடி இறுதியில் அவர்களுக்கு ஐந்து வகை உணவு வழங்கப்பட்டது.மதுரை மாவட்ட மகளிர் பிரிவு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மூத்த சாயி பக்தர்கள் இதனை சிறப்புடன் நடத்தி வைத்தனர்.

மதுரை

# முப்பெரும் விழா

கர்ப்பிணி பெண்கள் மட்டுமல்லாது அவர்களின் உறவினர்களும் தங்கள் மட்டற்ற மகிழ்ச்சியை தெரிவிக்கும்படியாக நிகழ்ச்சி நிறைவாய் அமைந்தது. பகவானுக்கு மங்கள ஆரத்திக்குப் பின் கலந்து கொண்ட அனைவருக்கும் பகவானின் பிரசாதம் வழங்கப்பட்டது.









மதுரை

# கோசாலை உழவாரப்பணி (26/01/2023)

பகவானின் பெருங்கருணையால், காலை 10 மணிக்குத் துவங்கிய இம்முகாமில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பசு தொழுவம் மற்றும் கோசாலை வளாகம் முழுவதும் குப்பைகள் மற்றும் பசுஞ்சாணம் அகற்றி தூய்மை செய்யப்பட்டது. பசுக்களின் ஓய்வுக்குடில் முழுவதும் பெருக்கி, நீரினால் கழுவி சுத்தம் செய்யப்பட்டது. சாயி காயத்ரி உச்சரிப்பின் நடுவே, வளாகத்தின் குறிப்பிட்ட இடங்களில் 5 மூலிகைச் செடிகள் நடப்பட்டன. குடிலுக்கு அருகில் சாயி பஜன் நிகழ்ந்த பின் 'கோ பூஜை' நடைபெற்றது. பசுவிற்கு மாலை அணிவித்து, லக்ஷ்மியின் வாசஸ்தலமான பசுவின் பின்புறம் சந்தன குங்குமம் பூசி, வேத மந்திரங்கள் ஓதி, கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டது. பூஜையின் நிறைவில் அனைத்து பசுக்களுக்கும் அகத்திக்கீரை, வாழைப்பழம் மற்றும் கடலை மிட்டாய் ஆகியவற்றை பக்தர்கள் தங்கள் கைகளால் வழங்கினர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் அடுத்த வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டு, மன நிறைவோடும், இறை அருளோடும் இல்லம் திரும்பினர்.

கலந்து கொண்டவர் விபரம்:
சாயி யவதிகள் – 07 , மகளிர் – 13 , சாயி இளைஞர்கள் – 10
பாலவிகாஸ் மாணவ மாணவிகள் – 06 , ஆடவர்கள் – 06
மொத்தம் – 42






**நீலகிரி**

# பாலவிகாஸ் குருமார்களுக்கான பயிற்சி முகாம் (16/01/2023)

பகவானின் அளப்பரிய கருணையால், மாவட்ட அளவிலான பாலவிகாஸ் குருமார்களுக்கானபயிற்சி முகாம் " ஸாய் கைலாஸ் "ல் நடைபெற்றது . இதில் முனைவர் இரமாதேவி அவர்கள், முனைவர் விஜயலட்சுமி அவர்கள், ஸ்ரீமதி கற்பகம் அவர்கள், ஸ்ரீமதி சரஸ்வதி அவர்கள் மற்றும் ஸ்ரீ குரு ராகவேந்திர ராவ் அவர்கள் பங்கேற்று பால விகாஸ் பாடத்தில் நவீன நுட்பங்களை கையாள்வதைப் பற்றி எடுத்துரைத்தனர். இதில் **32** மகிளா குரு மற்றும் **8** ஆண் குருமார்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்









## நீலகிரி

# மாவட்ட அளவிலான கிராம சேவை

(29/01/2023)

மாவட்ட அளவிலான கிராம சேவை ஜனவரி **29 2023** ,தும்மட்டி கிராமத்தில் காலை **11:00** மணி முதல் மாலை **4** மணி வரை நடைபெற்றது.கீழ்கண்ட சேவா பணிகள் அங்கு நடைபெற்றன.

- கோ பூஜை
- நகர சங்கீர்த்தனம்
- வேத கோஷம் மற்றும் பஜனை
- சத்சங்கம்

**மருத்துவமுகாம்:**

நீரிழிவு நோய், இரத்தஅழுத்தம், எலும்பு கனிம அடர்த்தி அளவிடப்பட்டன. எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் இருதய நோய் நிபுணரும் பங்கேற்றனர். **98** நோயாளிகள் பயனடைந்தனர்.

**வஸ்த்ர தானம்:**

**25** அன்பர்களுக்கு வஸ்த்ர தானமும் **400** அன்பர்களுக்கு அன்னதானமும் நடைபெற்றது.






தஞ்சாவூர்

# இலவச கண் சிகிச்சை முகாம்

(18/01/2023)

ஸ்ரீ அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை மற்றும் சத்ய சாயி சேவை சமிதி, எம். சாவடி இரண்டும் இணைந்து, தஞ்சாவூர் பெஸ்ட் உயர்நிலைப் பள்ளியில், ஜனவரி **28 2023** அன்று இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தினர்.
**187** ஆண்களும், **269** மகளிரும் பதிவு செய்தனர். **104** பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்பட்டது. அவர்கள், **2** பேருந்துகள் மூலம் மதுரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மருத்துவமனை சார்பில் **3** மூத்த மருத்துவர்களும், **12** துணை மருத்துவ ஊழியர்களும் பங்கேற்றனர். மேலும், பள்ளியிலிருந்து **10** என் எஸ் எஸ் தன்னார்வத் தொண்டர்களும் சேவையில் பங்களித்தனர். தஞ்சாவூர் முனிசிபல் வார்டு நம்பர் **15** கவுன்சிலர் இந்த முகாமில் கலந்து கொண்டார்.





தஞ்சாவூர்

# திருக்கோவில் கும்பாபிஷேக சேவை

(24/01/2023)

ஜனவரி **24 2023** முதல் ஜனவரி **26 2023** வரை, ஸ்ரீ யோக தியான பீட ஆஞ்சநேய சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. கோயில் அர்ச்சகர்களுக்கு உதவவும், சுமார் **500** க்கும் மேற்பட்டோருக்கு நாராயண சேவை செய்வதில் உதவி செய்யவும், கோவில் நிர்வாகத்தினர் நமது நிறுவனத்தின் சேவையை நாடினர். பகவானின் அருளால், சேவையை செய்து முடித்தோம்.







## திருவண்ணாமலை

# பாலவிகாஸ் பொங்கல் விழா (14/01/2023)

போகி மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு " தெய்வீக பொங்கல் " என்னும் தலைப்பில் பாலவிகாஸ் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியானது பாலவிகாஸ் குழந்தைகள் பஜனை, உரைகள் மற்றும் தெய்வீக காட்சிகளை சிறப்பாக திட்டமிட்டு செயலாற்றி, பகவானின் பாதங்களில் சமர்ப்பித்தார்கள்.









திருவண்ணாமலை

# தேசிய பெண் குழந்தைகள் தினத்தை ஒட்டி, சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

(24/01/2023)

திருவண்ணாமலை வேங்கிக்கால் சமிதியில் தேசிய பெண் பிள்ளைகள் தினத்தை முன்னிட்டு டெரி டெஸ் ஹோம் ஆதரவற்றோர் இல்லத்தில் மாவட்டத் தலைவர் திரு. நாராயணன் அவர்களின் ஊக்குவிப்பு பயிற்சியுடன் தொடங்கப்பட்டது. பெண் பாதுகாப்பு சட்டங்களைப் **(Legal aid)** பற்றி சட்ட ஆலோசகரும் வழக்கறிஞருமான பாசறை பாபு அவர்கள் விளக்கவுரையாற்றினார். இந்நிகழ்வில் **85**க்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகள் பங்கேற்றனர்.







வேலூர்

# படிஉற்சவம்

(01/01/2023)

வேலூர் மாவட்டம் ராணிப்பேட்டை, ஆற்காடு, வாலாஜா சமிதிகளின் சார்பாக குமரகிரியில் உள்ள முருகன் ஆலயத்திலும் கலாஸ்பாளையம், சத்துவாச்சாரி சமிதிகளின் சார்பாக தீர்த்தகிரி மலையில் உள்ள முருகன் ஆலயத்திலும் குடியாத்தம் சமிதி சார்பாக மீனூர், ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஆலயத்திலும் மாலையில் வேலூர், காந்திநகர் சமிதியின் சார்பாக சஞ்சீவிராய மலையில் படி உற்சவம் நடைபெற்றது. இதில் அனைத்து சாய் அன்பர்களும் கலந்து கொண்டு பஜனை பாடி பகவானின் ஆசியை பெற்றனர். மேலும் காந்தி நகரில் உள்ள வெங்காளியம்மன் திருக்கோயிலில் பாலவிகாஸ் கலை நிகழ்ச்சி, நாராயண சேவையும் நடைப்பெற்றது.







## வேலூர்

# கிராமப்புற விளையாட்டு சந்திப்பு 2023

(14/01/2023)

கிராம மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ள தத்து கிராமங்களான ராணிப்பேட்டையில் உள்ள எருக்கம் தொட்டியில் கிராமப்புற மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதே போல் மற்றொரு தத்து கிராமமான ஆம்பூரில் உள்ள சுட்ட குண்டா என்ற கிராமத்திலும் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் கிராமத்தில் உள்ள குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் மேலும் அவர்களுக்கு கட்டுரை போட்டி, ஓவிய போட்டி, சைக்கிள் ஓட்டும் போட்டி என பல போட்டிகள் நடத்தப்பட்டன அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் சுமார் 100 குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.






வேலூர்

# புற்றுநோய் - குழந்தை காப்பக சேவை

(22/01/2023)

வேலூர் மற்றும் சத்துவாச்சாரி சமிதியின் சார்பாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகளுக்கு. ஹார்லிக்ஸ் அரிசி, பருப்பு, பழங்கள் மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகள் வழங்கப்பட்டன. இந்த சேவையில் சுமார் 27 குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் பயனடைந்தார்கள்.








# ஆலய தூய்மைப்படுத்தும் பணி

(22/01/2023)

வேலூர் காந்தி நகரில் உள்ள வெங்காளியம்மன் ஆலயத்தில் சாதனா முகம் நடைபெற்றது. இதில் பால விகாஸ்குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் சேவாதல தொண்டர்கள் கலந்து கொண்டு துப்புரவு பணியை மேற்கொண்டு ஆலயத்தை தூய்மைப்படுத்தினர். மேலும் அங்கு நாராயண சேவையை செய்து பகவானின் ஆசியை பெற்றனர்







## வேலூர்

# வஸ்த்ர தானம் சேவை (29/01/2023)

குடியாத்தத்தில் உள்ள காளியம்மன் பேட்டை என்ற கிராமத்தில் ஆடை விநியோக சேவை நடைபெற்றது. இதில் அந்த கிராமத்திலிருந்து சுமார் 30 பேர் வந்து ஆடைகளை பெற்றுக் கொண்டனர்.






# அமிர்த கலசம் மற்றும் சாய் புரோட்டின் 29/01/2023)

குடியாத்தம், இந்திரா காந்தி நகரில் இரண்டு குடும்பங்களுக்கும், கரியவேடு கிராமத்தில் உடல் ஊனமுற்ற இரண்டு அன்பர்களின் குடும்பங்களுக்கும் அமிர்த கலசம், காய்கறிகள், மற்றும் சமையல் சாமான்கள் வழங்கப்பட்டன. அதே போல் வேலூர் மாவட்டத்தின் தத்து கிராமமான ராணிப்பேட்டையில் உள்ள எருமை தொட்டி கிராமத்தில் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் “சாய் புரோட்டின்” வழங்கப்பட்டது.







விழுப்புரம்

# சமத்துவ பொங்கல்

(07/01/2023)

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் உள்ள ஆலம்பூண்டி கிராமத்தில் மும்மதத்தின மக்கள் ஒன்றிணைந்து ஆண்டுதோரும் கிறிஸ்துவ தேவாலயத்தில் கொண்டாடும் சமத்துவ பொங்கல் விழாவில் விழுப்புரம் மாவட்டத்தின் அனைத்து சமிதிகளும் பங்கேற்றனர். இவ்விழாவில், கிராம மக்களுக்கு சிறப்பு மருத்துவ முகாமும், இளைஞர்கள் மற்றும் அந்த கிராம மக்களுக்கு இயற்கை பேரிடர் மேலாண்மை அறிமுக பயிற்சியும் நடைப்பெற்றது. நமது சமிதி உறுப்பினர்களுடன் கிராம மக்களும் இனைந்து தேவாலயத்தின் அருகில் **108** மரக்கன்றுகளை நட்டனர். அதன்பின் நாராயண சேவையுடன் இனிதே நிறைவுற்றது. தேவாலயத்தின் பாதிரியார் திரு. **M.** காஸ்பர் அவர்கள் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துக்கொண்டு நமது சமிதி உறுப்பினர்களுக்கு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்.



## விழுப்புரம்

# மருத்துவ முகாம்

(29/01/2023)

விழுப்புரம் மாவட்டம், வரதப்பனூர் கிராமத்தில் உள்ள ஏமப்பேர் சமிதியில் புதுவை அரியூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து சுமார் **350** கிராம மக்களுக்கு பொது மருத்துவ முகாமும் மரக்கன்று நடுதலும் நடைப்பெற்றது. இந்த முகாமில் வரதப்பனூர் கிராம தலைவர் அவர்களும் மாவட்ட பொறுப்பாளர்கள், நமது மாநில **SSS VIP** பொறுப்பாளர் திரு.ரமேஷ் அவர்களுடன் சமிதி சேவாதளத் தொண்டர்கள் சுமார் **60** நபர்கள் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து சுமார் **650** கிராம மக்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது.








விருதுநகர்

# இலவச ஹோமியோபதி முகாம் (08/01/2023)

நம் இறைவனின் இணையற்ற கருணையினால், ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை ஶ்ரீ சத்ய சாய் இலவச ஹோமியோபதி முகாம் சிவகாசி சமிதியில் நடைபெற்று வருகிறது . முழு மாதத்திற்குமான மருந்துகள் அன்று வழங்கப்படுகின்றன



# ஶ்ரீ சத்ய சாயி இலவச மனநல மருத்துவ முகாம் (15/01/2023)

**249** –வது ஶ்ரீ சத்ய சாயி இலவச மனநல மருத்துவ முகாம் சிவகாசி சமிதியில் நடைபெற்றது. இது ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை இறைவனின் அருள் கொண்டு சிறப்பாக நடைபெறுகிறது. ஒரு மாதம் முழுவதற்குமான மருந்துகள் அன்று வழங்கப்படுகின்றன. இந்த முகாமில் பங்கேற்ற அனைத்து நோயாளிகள் மற்றும் உடன் வந்தோருக்கும் நாராயண சேவை அருளப்பட்டது.







விருதுநகர்

# அரசு மருத்துவ முகாமில் சேவை

(24/01/2023)

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நோயினால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு அரசு மருத்துவ முகாமில் விருதுநகர் சேவாதள தொண்டர்கள் பங்கேற்றனர்.மேலும் அங்கு அனைவருக்கும் நாராயண சேவையும் நடைந்தேறியது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. மேகநாதன் ரெட்டி அவர்களும், முதன்மை கல்விஅதிகாரி திருமதி. ஞான கௌளரி
அவர்களும் பங்கேற்று நமது சேவை பணியினை பாராட்டினர்..







# பேரிடர் பயிற்சி முகாம் (26/01/2023)

இறைவனின் அளப்பரிய கருணையினால், ராஜபாளையம் ராஜூஸ் கல்லூரியில் சான்றிதழ் பாட நெறியில் பேரிடர் பயிற்சி துவங்கப்பட்டது. இப்பயிற்சி மேலும் சைவ பானு சத்ரிய கல்லூரி அருப்புக்கோட்டையிலும் துவங்கப்பட்டது . இராஜபாளையம் கல்லூரியில் தொடர்ச்சியாக பத்தாவது முறையாகவும் அருப்புக்கோட்டை கல்லூரியில் முதல்முறையாகவும் இப்பயிற்சி நடந்தேறியது.

இதில் **6** சமிதி உறுப்பினர்கள் மற்றும் **127** பொதுமக்கள் கலந்து கொண்டனர்









ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம்,தமிழ்நாடு
தெற்கில் இருந்து 3 பிரிவுகளிலும் மொத்தம்
46 தனித்துவமான செயல்பாடுகள்
ஜனவரி 2023 நடந்தன

## கல்வி பிரிவு

10

## சேவை பிரிவு

28

## ஆன்மீகப் பிரிவு

8




## முக்கிய குறிப்பு

எதிர்வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற , தெளிவான புகைப்படங்களுடன் தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன் மாவட்ட தலைவர் வழியாக கீழுள்ள மின் முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்."

மின்னஞ்சல் முகவரி

ssssotnreporting@gmail.com